தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் நேற்று (28.06.2025) சோழிங்கநல்லூர் மண்டலத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து இன்போசிஸ் நிறுவனத்தின் சமூக பங்களிப்பு நிதி மற்றும் சிறுதுளி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் தாங்கல் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி. வினய், செயல் இயக்குநர் கௌரவ் குமார், தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஆரணி பேரூர் திமுக மற்றும் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க நிகழ்ச்சி பேரூர் கழக செயலாளர் பி.முத்து மாவட்ட அமைப்பாளர் ரோஸ் பொன்னையன் ஆகியோர் ஏற்பாட்டில் ஆரணி பஜார் வீதியில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி +2 அதிக மதிப்பெண் பெற்றோர்களுக்கு ஊக்கத்தொகை ஆயிரம் பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் உடன் பேச்சாளர் சைதை சாதிக், மு.பகலவன், ஜெ.மூர்த்தி, கே.வி.ஜி.உமா மகேஸ்வரன், மு.கதிரவன், குணசேகரன், நா.செல்வசேகரன், ஞாயிறு ஆனந்த் குமார், ரமேஷ், வெங்கடேசன் கரிகாலன் நிலவழகன் கலையரசன் நீலகண்டன் ஜெயக்குமார் ரகுமான் கான், மகேந்திரன், பாலகுருவப்பா, நீலகண்டன் , பாலாஜி, சந்தோஷ், பிரபா, உள்பட பலர் உள்ளனர்

அரசமைப்புச் சட்ட முகப்புரையில் இடம்பெற்றுள்ள சோசலிஸ்டு, மதச்சார்பின்மையை நீக்கவேண்டும் என்கிறது ஆர்.எஸ்.எஸ்.

மனுதர்மமா - மனித தர்மமா என்பதுதான் முக்கிய பிரச்சினை - விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 30-

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையில் முக்கியமாக இடம்பிடித்துள்ள சோசலிஸ்டு, மதச்சார்பின்மை இரண்டையும் நீக்கவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். பொதுச் செயலாளர் கூறியுள்ளார். மீண்டும் மனுதர்ம ஆட்சியைக் கொண்டுவருவதுதான் ஹிந்துத்துவாவாதிகளின் நோக்கம். நாட்டை ஆளவேண்டியது மனித தர்மமா? மனுதர்மமா? என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தி.மு.க. கூட்டணியை வலுப்படுத்துவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆர்.எஸ்.எஸ். இயக்கம் இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் தொடக்கம் முதல் இன்றுவரை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதே இல்லை!

ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் உள்ள மூத்த தலைவர்கள் பிரதமர் மோடி மற்றும் பலரது நடவடிக்கைகள் அமைச்சரவையில் பதவி ஏற்கும்போது, எடுத்த பிரமாணம், அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான, அப்பட்டமான இரட்டை வேடப் போக்குயுடையன என்பதை நாடு புரிந்துகொள்ள வேண்டும்; மக்கள் புரிந்துகொண்டு வருகிறார்கள்.

ராகுல் காந்தி வெளியிட்ட பதிவு!

இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், புதுடில்லியில் நேற்று (27.6.2025) வெளியிட்ட பதிவில், "ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முகமூடி தற்போது விலகியுள்ளது. அரசமைப்புச் சட்டத்தை ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், பி.ஜே.பி.,யும் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். சமத்துவம், மதச்சார்பின்மை, சமூகநீதி குறித்து அரசமைப்புச் சட்டம் அவர்களை எரிச்சலூட்டுகிறது.

மனுஸ்மிருதியை அமுல்படுத்துவதுதான் அவர்களின் விருப்பம். ஏழைகள் மற்ற ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பறிப்பதும், அவர்களை மீண்டும் அடிமைகளாக ஆக்க வேண்டும் என்பதுமே அவர்களின் விருப்பம். இந்தக் கனவைக் காண்பதை ஆர்.எஸ்.எஸ். ஒருபோதும் நிறுத்தாது.

இதில், ஆர்.எஸ்.எஸ். வெற்றி பெற நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்" என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க.வுக்கு எதிர்பார்த்த முழு பெரும்பான்மை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுக்குக் கிட்டியிருந்தால், இந்நேரம் அவர்கள் பகிரங்கமாகவே நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பொருட்டாகக் கருதாமல், மனுதர்மத்தை அரசமைப்புச் சட்டமாக்கிட அனைத்து முயற்சிகளையும் செய்திருப்பார்கள்.

மைனாரிட்டி அரசாக, பிரதமர் மோடி தலைமையிலான தற்போதைய ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. அரசு இருப்பதால், அதனை செயல்படுத்த வாய்ப்பில்லை.

என்றாலும், அதை அவர்கள் தங்களது மறைமுகத் திட்டமாகவே (Hidden Agenda) வைத்து, அவ்வப்போது நோட்டம் விட்ட நிலையிலேயே உள்ளார்கள்.

அரசமைப்புச் சட்டத்தை சீர்குலைக்க விரும்பும் ஆர்.எஸ்.எஸ்.

பிரதமர் மோடி அவர்களது பெருமுயற்சியால் ஆர்.எஸ்.எஸ்.சின் பொதுச்செயலாளராக உள்ள தத்தாத்ரேய ஹோசபாலே, "புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படவேண்டும்; தற்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் உள்ள முக்கிய கொள்கை நெறிகளில் இரண்டை - பகிரங்கமாகவே - நீக்கவேண்டும்" என்று வற்புறுத்தியுள்ளார்.

'Socialist' - சமதர்ம சமுதாயம் 'Secular' - மதச்சார்பற்ற

என்ற இரண்டு வார்த்தைகளையும் தூக்கி எறிந்துவிட்டு, 'ஹிந்து ராஷ்டிரம்' என்ற ஹிந்துத்துவ, ஆரிய, மனுதர்ம முறைக்கே நாட்டை இழுத்துச் செல்ல, ஆயத்தமாகி வருகிறார்கள்!

இதை, தந்தை பெரியாரின் திராவிட இயக்கமும், மற்ற இடதுசாரி முற்போக்கு இயக்கங்களும், தற்போதைய இந்திய தேசிய காங்கிரசும் கடுமையாக எதிர்த்துக் கொண்டுள்ளன.

நாட்டில் நடைபெறுவது வெறும் அரசியல், தேர்தல் போராட்டமல்ல!

எனவே, இப்போது நம் நாட்டில் நடைபெறும் போராட்டம் வெறும் அரசியல், தேர்தல் போட்டி அல்ல. மனு தர்மமா? சமதர்மமா?

(ஹிந்து) மதவெறி ஆட்சியா? மதச்சார்பற்ற ஆட்சியா?

தமிழ்நாட்டினை மாற்றிட 'கஜகர்ணம்' போட்டுப் பார்ப்பதும், அதற்குப் பலரை அச்சுறுத்தியும், ஆசை காட்டியும், தங்களை விற்றுக்கொள்ளும் விபீடண, பிரகலாத, அனுமார் பட்டாளங்களையும், தேர்தல் கூட்டணி என்ற தூண்டில் போட்டுப் பிடிக்க, சாம, பேத, தான, தண்ட முறைகள் மனுதர்மம், ஆரிய பஞ்சதந்திரம் முறைகளையே கையாளுகிறார்கள்!

கடந்த 2014-ஆம் ஆண்டில், "பல்ராம் சிங் vs ஒன்றிய அரசு" என்ற வழக்கு ஒன்றை ஆர்.எஸ்.எஸ். கருத்தாளர்களை விட்டு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

'socialist', 'Secular' என்ற இரண்டு வார்த்தைகளை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையிலிருந்து நீக்க வேண்டும் என்பதுதான் அந்த வழக்கின் முக்கியாம்சம்.

அதை உச்சநீதிமன்றம் அறவே நிராகரித்ததோடு, "42 ஆவது திருத்த அரசமைப்புச் சட்டம் செல்லும். அது எஸ்.ஆர்.பொம்மை வழக்கின் தீர்ப்பின்படியே, இரண்டு பதங்களும் ('socialist', 'Secular') கட்டாயம் அரசமைப்புச் சட்டத்தில் இருந்தே தீரவேண்டிய ஒன்றாகும்" என்று உறுதியான தனது தீர்ப்பைக் கூறிவிட்ட பிறகும், ஆர்.எஸ்.எஸ்., மீண்டும் அதனை வற்புறுத்துவதின் ரகசியம் புரியவில்லையா?

மனுதர்ம மனப்பான்மைதான்!

தந்தை பெரியாரின் தத்துவமும், திராவிட இயக்கமும் பெரியார் மண்ணை, கண்ணை இமை காப்பதுபோல், காத்து வருகின்றபடியால், ஒப்பற்ற 'திராவிட மாடல்' ஆட்சி, அதன் ஆற்றல்மிக்க முதலமைச்சர் தலைமையில் மிகச் சிறப்பாக - சோதனைகளைக் கடந்து, நெருப்பாற்றில் நீந்தி, சாதனைச் சரித்திரம் படைப்பதாலும், தி.மு.க. அதன் அபார ஆளுமைத் திறனாலும், அதன் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களது அரசியல் வியூகங்களாலும், வினைத்திட்பத்தாலும் மனு பரம்பரை ஆட்சி, இங்கே துளிர்விட முடியாத தடுப்பணைகள் - பாறைகளின் பாதுகாப்பு போல் உறுதி பெற்று நடைபெறுகிறது.

கொள்கைக் கூட்டணி, அதற்குக் கிடைத்துள்ள ஒரு தனித்துவமான அரசியல் போராயுதம்.

எனவே, மனுதர்மமா? மனிதநேயமா? என்ற போராட்டம் அடுத்த ஆண்டு வருகின்ற தேர்தலிலும், மனுவாத கனவின் முதுகெலும்பை முறித்துக் காட்டுவது உறுதி!

எது வெல்ல வேண்டும்?

எனவே, இரண்டில் எது வெல்லும் - எது வெல்ல வேண்டும்? என்பதில் நாடு தழுவிய விழிப்புணர்வு வெளிச்சத்தை ஏற்படுத்துவது இன்றியமையாத கடமையாகும். ஒவ்வொரு முற்போக்காளர்கள், மனிதத்தை மதிப்பவர்கள், 'அனைவருக்கும் அனைத்தும்' என்ற தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்கள் - தி.மு.க. கூட்டணியை, மேலும் பலப்படுத்திடுவது தமது உயிர்க் கடமையாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் பங்களிப்புடன் விரைவில்

ஏலகிரி - ஏற்காடு மலைகளில் ரோப் கார் அமைக்கும் பணி!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

திருப்பத்தூர், ஜூன் 30 -

தனியார் பங்களிடப்புடன் ஏலகிரி மற்றும் ஏற்காடு மலைகளில் விரைவில் ரோப் கார் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் சேலம் ராஜேந்திரன், ஏலகிரி மலையில் நடைபெற்ற கோடை விழாவில் பங்கேற்று பேசுகையில் தெரிவித்தார்.

விழாவில் அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் பொற்கால நிர்வாகத்தை தந்து கொண்டிருக்கிறார்கள். இந்திய துணை கண்டத்தில் இருக்கிற அத்தனை மாநிலங்களும், மாநிலங்களில் இருக்கின்ற ஆட்சியாளர்களும் வியந்து பாராட்டுகின்ற அளவிற்கு ஒரு சிறப்பான பொற்கால ஆட்சியை தந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றுகின்ற திட்டங்கள், செயல்படுத்துகின்ற திட்டங்களை எல்லாம் மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்ற அளவிற்கும், மற்ற உலக நாடுகளில் இருக்கின்ற சில நாடுகள் பின்பற்றுகின்ற அளவிற்கு பல்வேறு திட்டங்களை சிறப்பான திட்டங்களை தொலைநோக்குப் பார்வையோடு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

முதலமைச்சர் அவர்களின் வழியில் பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எந்த பொறுப்பினை ஏற்றுக் கொண்டாலும் சிறப்பாக பல்வேறு பணிகளை நிறைவேற்றி, ஆற்றல் பெற்று அதன் மூலம் இந்த சமுதாயத்திற்கு பணியாற்றி வரக்கூடியவர். கடந்த முறை 2006 ஆம் ஆண்டில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நமது அமைச்சர் அவர்களை உணவுத் துறை அமைச்சராக நியமித்து, அத்துறையில் 21 சீர்திருத்தங்களை கொண்டுவந்து அவற்றையெல்லாம் நிறைவேற்றி தமிழ்நாட்டிலேயே சிறப்பான நிர்வாகத்தை உணவு துறையில் கொண்டு வந்தார்.

உச்சநீதிமன்ற நீதிபதி குழு தமிழ்நாட்டில் பொது விநியோகத்துறை பொதுமக்களுக்கு எப்படி விநியோகிக்கப்படுகிறதோ அந்த முறையில் மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்ற அளவிற்கு முக்கிய தீர்ப்பை தந்தார்கள். இதற்கு முன்னதாக சென்னை மாவட்டத்தில் தான் குடும்ப அட்டைகள் தயாரிக்கப்பட்டு, மற்ற மாவட்டங்களிலும் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் அமைச்சர் அவர்களே, உணவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்று அனைத்து மாவட்டங்களிலும் குடும்ப அட்டைகள் தயார் செய்யப்பட்டு புதிதாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் பணியையும் நிறைவேற்றி தந்தார். மேலும் 150 குடும்ப அட்டைகளும் இருந்தாலும் கூட ஒரு நியாய விலை கடை வைக்கப்பட வேண்டும் என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அனுமதி யோடு அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றினார்கள். அதேபோல் அனைத்து நியாய விலை கடைகளிலும் துவரம் பருப்பு, பாமாயில் விநியோகம் செய்தது அமைச்சர் உணவுத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் தான்.

தற்போது பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் துறை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சராக பொறுப்பேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பாராட்டுதலை பெறக்கூடிய அளவில் சிறப்பாக பணியாற்று வருகிறார்.

இந்த நான்காண்டு காலத்தில் பல்வேறு பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். பொதுப்பணித்துறை சார்பில் கிண்டியில் பல்நோக்கு மருத்துவமனை குறித்த காலத்திற்கு முன்பாகவே மக்களுடைய பயன்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டது . மதுரையில் கலைஞர் நூலகத்தை விரைவாக கட்டி முடித்து மாணவர்களும் பொது மக்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் கன்னியாகுமரியில் கண்ணாடி பாலத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, விரைந்து முடிக்கப்பட்டு பாலத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதேபோல் பல்வேறு தலைவர்களுக்கு சிலைகள், பல்வேறு திட்ட பணிகள், நெடுஞ்சாலைத்துறையில் பல்வேறு சாலைகள், குறிப்பிட்ட காலத்திற்குள் தரமான சாலைகளாக சர்வதேச சாலைகளாக அமைத்து தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சியில் இந்த சிறப்பான பணிகளை நிறைவேற்றுவதற்கு பொதுப் பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் பணி ஆற்றி வருகிறார்கள்.

மேலும் ஏலகிரி மலை பொறுத்த வரையில் சுமார் 1100 மீட்டர் கடல் மட்டத்திலிருந்து அமைந்திருக்கு ஒரு சுற்றுலா தளமாக இயற்கை எழில் கொஞ்சுகின்ற சுற்றுலா தளமாக விளங்கி கொண்டிருக்கின்றது. ஏலகிரி மலையில் ஏழாம் நூற்றாண்டை சார்ந்த நடுக்கல் கண்டறியப்பட்டு அதில் திருப்பத்தூரில் பகைவர்கள் முற்றுகையிட்டபோது, காயல் ஊரைச் சேர்ந்த மலை பையன் என்ற வீரன் போரிட்டு மாண்டதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் மலை ஏற்றம் சாகச விளையாட்டுகள், அமைதியான சூழல் விரும்புவோருக்கு இது ஒரு சிறந்த சுற்றுலா தளமாக விளங்கி கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாது ஆண்டு முழுவதும் எளிமையான மிதமான காலநிலை இருக்கின்றனர் ஒரு சிறப்பு பெற்ற மலையாக ஏலகிரிமலை இருக்கிறது. ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு உகந்த இடமாக ஏலகிரி மலை திகழ்கிறது. இங்கே இருக்கின்ற புங்க னூர் ஏரி இந்த பகுதியில் இருக்கின்ற மக்களால் அமைக்கப்பட்ட ஒரு சிறப்பான ஏரியாக நமக்கு கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு சுற்றுலா திட்டங்கள் இந்த பகுதியில் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது.

ஏலகிரி மலையில் 2021-22 ஆம் ஆண்டு சுமார் ரூ.3 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 9 வகையான சாகச சுற்றுலா பணிகள், ஜிப் லைனிங், பேராக் லைடிங், உட் ஹவுஸ் போன்ற இவையெல்லாம் அமைக்கப்பட்டு சுற்றுலா பயணிகளுக்கு பயன்பெறும் வகையில் இந்த ஆட்சியில் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இதேபோல் ஏரியில் படகு இல்லம், பல்வேறு பணிகள் 87 லட்சம் ரூபாய் மதிப்பில் கடைகள், அதேபோல் சுற்றுலாத்துறை அறிவிப்பின் படி ரூபாய் 10 கோடியில் ஏலகிரி மலைக்கு பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு அறிவிக்கப்பட்டு இயற்கை பூங்கா, படகு இல்லம் இவையெல்லாம் சீர்படுத்துகிற வகையில் அந்த பணிகள் எல்லாம் நடைபெற்று வருகிறது. ஏலகிரி மலைக்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு இன்னும் கூடுதலாக பயன்பெறுகின்ற வகையில் முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு இந்த பகுதிக்கும் ஏற்காடு பகுதிக்கும் ரோப் கார் அமைக்கின்ற பணி தனியார் பங்களிப்போடு நிறைவேற்றுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் குறிப்பாக மகளிர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி கொண்டிருக்கின்றார். முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களுக்கும் சிறந்த நிர்வாகத்தை தந்து தொடக்கத்திலே குறிப்பிட்டதை போல ஒரு சிறப்பான ஆட்சி நிர்வாகத்தை தமிழ்நாட்டில் நடத்திக் கொண்டிருக்கின்றார். இந்த ஆட்சி இன்னும் 25 ஆண்டு காலம் தொடர்ந்திட வேண்டும். எனவே நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆதரவு தருகின்ற வகையில் நீங்கள் எப்பொழுதும் உங்களுடைய ஆதரவை வழங்கி உறுதுணையாக இருக்க வேண்டும்

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம்

திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட பகுதிக் கழக (BDA) பயிற்சிக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட பகுதி, (BDA) பயிற்சிக் கூட்டம் இன்று (30.06.2025 திங்கட்கிழமை) மாலை 4.00 மணிக்கு, திருவொற்றியூர் டி.எச்.ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீ சாய் மஹால் மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவெற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன், திருவொற்றியூர் கிழக்கு பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு, திருவொற்றியூர் மத்திய பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம், திருவொற்றியூர் மேற்கு பகுதிச் செயலாளர் வை.மா.அருள்தாசன், சென்னை வடகிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஏ.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப அணி திருவொற்றியூர் தொகுதிப் பொறுப்பாளர் ராஜேஷ் பயிற்சி அளிக்க உள்ளார்.

மேற்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் (BDA) நிர்வாகிகளை அழைத்து வந்து தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் **எஸ்.சுதர்சனம்** எம்.எல்.ஏ.
செயலாளர் சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி சைதை கிழக்கு பகுதி திமுக வின் வாக்குச்சாவடி பாகநிலை முகவர்கள் மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்கள் கலந்துரையாடல் கூட்டம் சைதை கிழக்கு பகுதி செயலாளரும் மண்டல வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் தொகுதி மேலிட பொறுப்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நா.மணிகண்டன் ஆகியோர் பாக முகவர்கள் மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்களுக்கு ஓரணியில் தமிழ் நாடு என்ற செயலி மூலம் காணொளி காட்சி பயிற்சி அளித்து விளக்க உரை நிகழ்த்தினர். கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், பகுதி நிர்வாகிகள் இ. முருகேசன், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் தா.மோகன்குமார் எம்.சி., நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, சைதை ஆ.வரதன், வே.முருகன் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி விக்டர் பென்னி கிளமன்ட், ஜோ.சசிகுமார், ஜெ.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதி இணையவழி உறுப்பினர் சேர்க்கை பயிற்சி பாசறை கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவரின் ஆணையின்படி தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் "ஓரணியில் தமிழ்நாடு" இணைய வழி உறுப்பினர் சேர்க்கை பயிற்சி பாசறை கூட்டம் இன்று (30.6.2025 - திங்கள்கிழமை மாலை 5.00 மணியளவில் கோயம்பேடு 100 அடி சாலையில் அமைந்துள்ள விஜயா பார்க் ஹோட்டலில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வலைத்தள முகவர்கள் (BDA) மற்றும் பாக முகவர்களுக்கு (BLA2) இணையதள வழியாக புதிய உறுப்பினர்களை சேர்ப்பது குறித்து விரிவான ஆலோசனை கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர், பகுதிக் கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நே.சிற்றரசு
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் பகுதிகள் தோறும் வாக்குச்சாவடிகள் வாரியாக பாக முகவர்கள் ஆலோசனை ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன புனித தோமையார் மலை ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சியில் உள்ள அந்தந்த பாகங்களில் பாக முகவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ கருணாநிதி எம்.எல்,ஏ கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கி கூட்டங்கள் ஆய்வு செய்து ஓர் அணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தல் வரும் சட்டமன்றத் தேர்தலில் எவ்வாறு களப்பணி ஆற்றுவது என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார் அப்பொழுது ஒன்றியச் செயலாளர் விவேகானந்தன் என்கிற ஜி, கே, ரவி ஊராட்சித் தலைவர் வனஜா தயாளன் துணைத் தலைவர் ஜோசப் ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ் கிளைக் கழகச் செயலாளர் மன்ற உறுப்பினர்கள் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.